செ.வெ.எண் : 15/ ஏப்ரல் நாள் : 08.04.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகளை

## இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.நரேந்திர சிங் பர்மார்,இ.ஆ.ப., அவர்கள், பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.ஆனந்த் ஸ்வரூப்,இ.ஆ.ப., அவர்கள்

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி மற்றும் பரமக்குடி சட்டமன்ற இடைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் இன்று (09.04.2019) இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.நரேந்திர சிங் பர்மார்,இ.ஆ.ப., அவர்கள், பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.ஆனந்த் ஸ்வரூப்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தேர்தல் வாக்கு எண்ணும் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி, இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான பொதுத்தேர்தல் மற்றும் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகின்ற 18.04.2019 அன்று நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவு முடிந்தவுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட தேர்தல் மண்டல அலுவலர்கள் மூலம் வாக்கு எண்ணும் மையமான இராமநாதபுரம் அண்ணா பல்லைக்கழக பொறியியல் கல்லூரியில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் (Strong Room) வைக்கப்படும். இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி 23.05.2019 அன்று வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறும்.

அதன்படி இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், திருவாடனை, திருச்சுழி மற்றும் அறந்தாங்கி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகள் வாரியாகவும், பரமக்குடி சட்டமன்ற இடைத்தேர்தலுக்கும் என தனித்தனியே வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான பாதுகாப்பு அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு அறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வைப்பதற்கான வரிசை எண் குறியிடுதல் (Serial Number Marking), பாதுகாப்பு தடுப்புகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர், பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான தேர்தல் பொது பார்வையாளர், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தார்கள்.

ஆய்வினைத் தொடர்ந்து, வாக்கு எண்ணும் நாளன்று ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பு அறையிலிருந்து வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்வதற்கான வழி, வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கு எண்ணும் அறைக்கு வந்து செல்வதற்கான வழி என முறையே திட்டமிட்டு போதிய அளவு பேரிகார்டு தடுப்புகள் அமைத்திடவும், தேவையான இடங்களில் சி.சி.டிவி கேமராக்களைப் பொருத்தி கண்காணிப்பதற்கான போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் மரு.ஆர்.சுமன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.சிவகாமி, இராமநாதபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.நடராஜன், அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் திரு.டி.சேகர் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**